# மஸ்ஜிட் இந்தியாவில் மண்சரிவு ஏற்பட்ட ஒரு பகுதி சாலை மீண்டும் திறக்கப்பட்டது

**நமது நிருபர்**

கோலாலம்பூர், நவ.21-
மஸ்ஜிட் இந்தியாவில் மண்சரிவு சம்பவம் ஏற்பட்ட ஒரு பகுதி பொதுமக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டு விட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது.

இங்கு ஜாலான் மஸ்ஜிட் இந்தியா போலீஸ் நிலையம், வர்த்தகத் தலங்கள் ஆகியவை கடந்த 10ஆம் தேதியிலிருந்து திறக்கப்பட்டு விட்டன.

சீரமைப்புப் பணிகள் மற்றும் அப்பகுதியில் நில விசாரணை வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து இந்த திறப்பு மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில்



இச்சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட கால கட்டம் முழுவதும் பொதுமக்கள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுமை மற்றும் ஒத்துழைப்பைப் பெரிதும் மதிப்பதாக ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.